பொதுக் காலத்தின் ஆறாம் ஞாயிறு - A ஆண்டு

**முதல் வாசகம் : சீ.ஞா 15:15-20**
**இரண்டாம் வாசகம்: 1 கொரி 2:6-10**
**நற்செய்தி வாசகம்: மத் 5: 17-37**

**முன்னுரை:**

**நாம் நமக்கான கட்டளைகளைக் குறித்து சிந்திக்கும் போது நம் மனதில் விடுதலை / சுதந்திரம் போன்ற உணர்வுகள் எழுவதில்லை. நாம் பலமுறை வதிக்கப்படும் சட்ட திட்டங்கள் அன்றாட வாழ்வில் கபைப்பிடிக்க வேண்டிய பல ஒழுங்குமுறைகள்ஈ சில தடைகள், தளைகள் ஆகியவற்றை நாம் நமக்கு வதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளாகவே கருதுகிறோம். ஆயினும் இன்றைய நறசெய்தியில் இயேசு தமது மலைப்பொழிவில் பல கட்டளைகளையும சட்ட திட்டங்களையுமே குறிப்பிட்டுப் பேசுகிறார். ஆனால் அவற்றின் மையக்கருத்தை நாம் ஆய்ந்துப் பார்க்கும் போது அவை நமக்கு அச்சுறுத்தலையோ அல்லது கட்டாயமாக கடைப்பிடிக்க வேண்டும் என்ற திணிப்புடனோ இல்லை. இது குறித்து புனித அகுஸ்தீனார் ''நாம் கடவுள் நம்மிடம் எதிர்ப்பார்க்கும் அனைத்தையும் கட்டாயத்தினால் அல்ல மாறாக அவர் மீதுக் கொண்ட அன்பினால் அவர் சேட்பதற்கும் மேலாக செய்வோம். எனக்கு எது உதவிகரமானதோ அது எனக்கு உண்மையாகவே உதவிகரமாக இருக்கிறது. அது எனக்கு மட்டுமல்ல நான் என் வாழ்வில் அன்றாடம் சந்திக்கும் மக்களுக்கும் உதவிகரமாக உள்ளது'' என்கிறார்.**

**மறையுரை -- நம்மை வாழ்விற்கு வழிநடத்தும் சட்டங்கள்:**

**துசக்க சிறுகதை - ஒரு சிறுவனும் சட்ட திட்டங்களும்**

**பல ஆண்டுகளுக்கு முன் என் நண்பர் தன் சிறுவயதில் நிகழந்ததை கதையாகப் பகிர்ந்துக் கொண்டார். அவர் கூறியதாவது -- ''நான் சிறுவனாக இருந்தபோது என் தாய் எனக்குப் பல்வேற சட்டதிட்டங்களைப் போட்டிருநதார். ஸ்டவ் அடுப்பைத் தொடக்கூடாது, வீதியில் கண்டபடி ஓடக்கூாது, என் தங்கையை கிண்டல் செய்யக் கூாது போன்றவை. ஒருநாள் என் தாயிடம் ''ஏன் எனக்கு மட்டும் இத்தனை சட்டங்கள், ஒழுங்கு முறைகள்? என் வயதையொத்த மற்ற பிள்ளைகளுக்கு இத்தகைய சட்டங்கள் விதிக்கப்பட்டதல்லையே'' என்றுக் கேட்டடேன். என் தாய என் முன் முழந்தாள்படியிட்டு என் கண்களை ஊடுருவப் பார்த்து ''நான உன்னை அதிகமாக நேசிக்கிறேன். நீ எங்கும் யாரிடமும் காயப்பட்டு விடக்கூடாது என்று விரும்புகிறேன்'' என்றார். அந்த நண்பர் கூறியபடி அவா பல ஆண்டுகள் கழித்தே தன் தாய் விதித்த சட்டதிடடங்கள் ஒழுங்குகளள் குறித்து அறிந்துக் கொண்டாராம். அவைத் தன்னைக் க்ட்டுப்படுத்துவதற்கு அல்ல மாறாக அவை எனனை பாதுகாக்க, அது நான் மாண்புடன் வாழ அது அவர் என் மீதுக் கொணட அன்பைக் காட்ட என்பதைப் புரிந்தக் கொண்டதாக அறிந்துக் கொண்டதாகக் கூறினார்**

**இத்தகைய பாதையில் தான் நம்மை இன்றைய நற்செய்தி அழைத்துச் செல்ல விழைகிறது.**

**1. சமயம் என்றாலே நமக்கு சட்டங்களும் அதைக் கடைப்பிடித்தலும் என்று தான் தோன்றுகிறது:**

**நமக்குள் நாம் உண்மையாக சிந்தித்துப் பார்ப்போம். நம தாய் திருஅவையும் கூட ஒழுக்கத்தைய் சட்ட திட்டங்களையும் வலியுறுத்தி நடைமுறைப படுத்தியதால் தான் அது உலகினர் மத்தியில் நற்பெயரையம், கீர்த்தியையும் பெற்றது. நமக்கெல்லாம் இறைநம்பிக்கை என்றாலே ''இதை செய்யாதே'' ''அதை செய்யாதே'' என்ற பட்டியல் நம் முன் நீட்டப்படும் உணர்வு தான் ஏற்படுகிறது. அதிலும் இன்றைய நற்செய்தி அதிலும் முக்கியமாக இயேசு ''மறைநூலறிஞர் பரிசேயர் ஆகிறோரின் நெறியைவிட உங்கள் நெறி சிறந்திருக்கட்டும்'' என்றுக் கூறுவது நம்மை திணறிப் போகச் செய்கிறது**

**ஆனால் இயேசு தீயோரை ஒருபோதும் கடிந்துக் கொண்டு விமர்சிக்கவில்லை. ஆனால் இயேசு அனைத்து சட்ட திட்டங்களையும் இம்மியும் பிசகாமல் கடைப்பிடிப்போருடன் தம் சீடரைஒப்பிட்டுப் பேசுகிறார். ஆனால் அவ்வாறு அதிகப்படியான சட்ட திட்டங்களை நுணுக்கமாகக் கடைப்பிடிப்பதால்கூட சில ஆபத்துகள் உள்ளன. அப்படி கடைப்பிடிப்போர் அதைக் குறித்து மட்டுமே அதிகம் கவலைப் படுவோராக, அதை தீவிரமாகக் கடைப்பிடிப்பவர்களாக, தங்களையே நியாயப்படுத்தி நற்சான்று வழங்கிக் கொள்பவர்களாக மாறிவிடும் அபாயம் உள்ளது.**

**அப்படிப்பட்ட இறுக்கமான சட்டத் திட்டங்களுக்கும் மேலாக இயேசு இன்னும் எதை எதிர்ப்பார்க்கிறார்?**
**இனி மேலும் சட்டங்கள் இயற்றப்படத் தேவையில்லை . ஆனால தேவையானது ஆழமான அன்பு செய்யும் இதயம்.**
**2. சட்டங்கள் என்பவை யாவை?**
**நாம் இதை வேறு விதமாகக் கேட்போம் -- ஏன் கடவுள் மனிதருக்கு சட்டங்களைக் கொடுத்தார்?**

புதிய ஏற்பாட்டுக் காலத்திலிருந்து இயேசுவின காலம் வரை சட்டங்களுக்கு இரு காரணங்கள் இருந்தன.
முதலட காரணம் சட்டங்கள் மனிதலை பாதுகாக்க ஏற்படுத்தப்பட்டன. அவை அவர்களை குழப்பங்கள். அநீதி, துன்பங்களிலிருந்துக் காப்பாற்றின
இரண்டாவதாக -- அவை இறைவெளிப்பாடாக விளங்கின -

சட்டங்கள் இறைவனின் இதயத்தைக் காட்டின
அ. ஒவ்வொரு மனிதரையும் கொடையாகப் பாதுகாக்கும் இறைவனைக் காட்டின.
ஆ. மனிதரின் மாண்பைப் பாதுகாக்கும் இறைனைச் சுட்டிக் காட்டின .
இ மாந்தரைத் தீவிரமாக அன்பு செய்யும் இறைவனைப் படம் பிடித்துக் காட்டின..

ஒரு தாய் தன் மகனை ஸ்டவ் அடுப்பைத் தொடக்கூடாது என்றுக் கட்டளையிட்டது அவனைக் கட்டுப்படுத்துவதற்கு அன்று மாறாக அந்த தாய்க்கு மகன் மீதிருந்த அன்புத் தான் காரணம். கடவுளின் சட்ட திட்டங்களும் இதையொத்ததே.

இவற்றையெல்லாம் நாம் உள்வாங்கிக் கொண்டால். நாம் அனைத்தையும் கடவுளின் கண்களால் பார்க்க இயலும்.

3. இயேசு சட்டங்களைக் கூர்மைப்படுத்துகிறார். அது நமது பளுவை அதிகரிக்க அல்ல மாறாக நம்மை விடுதலையாக்கவே.

இயேசு சட்டங்கள் குறித்து ''முற்கலத்தில் கூறப்பட்டிருப்பீர்கள்'' ........ ''ஆனால் நான் உங்களுக்கச் சொல்கிறேன்'' என்றுக் கூறும்போது அவர் எந்த சட்டத்தையும் மாற்றியமைக்கவில்லை மாறாக அதன் ஆழத்திற்கு அழைத்துச் செல்கிறார்.

பரிசேயரின் பிரச்சனை சட்டத்திற்கக் கீழ்ப்படிவது அல்ல ஆனால் அவர்களது வெளிப்படையானக் கீழ்ப்படிதலே. அவர்கள் சட்டத்தை இம்மியளவும் பிசகாமல் கடைப்பிடிப்பவர்கள் ஆனால் அவர்கள் மனித நேயமறறவர்கள், மனிதரைப் பற்றிய அக்கறையற்றவர்கள்.

எனவே சட்டங்களை ஆழமாக ஊடுருவிப் பார்க்கிறார்:

கொலை செய்யாதே என்பது உயிரை எடுப்பது மட்டுமல்ல ஆனால் மனிதரை தங்கள் வார்த்தையால் காயப்படுத்துவதையும் உள்ளடக்கியது என்கிறார்

விபசாரம் செய்யாதே என்பதுடன் நிறுத்திக்கொள்ளாமல் ''மனத்தால் தீய எண்ணங்களுடன் ஒரு பெண்ணைப் பார்ப்பதையே தவிர்க்கக் கற்பிக்கிறார்

ஆணையிடக் கூடாது என்ற சட்டத்தைக் குறித்துப் பேசும் போது ''ஆணையிடக் கூடாது என்றுக் கூறியதுடன் உங்கள் பேச்சு ஆம் என்றால் ஆம் என்றும் இல்லை என்றும் இருக்கட்டும் என்று இருக்கட்டும்.

இத்தகைய சட்ட விளக்கங்களால் அவர் நம்மைச் சுற்றி வேலியடைத்து முடக்க விரும்பவில்லை மாறாக அவர் நமக்கு விடுதலையின் பாதையைத் திறந்துவிடுகிறார்.

சிறு நிகழ்வு -- நவசந்நியாசியும் ஆதீனத் தலைவரும் --

மெல்க் சந்நியாச மடத்தின் தலைவராக இருந்து ஒய்வுப் பெற்ற ஒரு ஆதீனத் தலைவர் தான் ஒரு நவசந்நியாசியாக இருந்தபோது தனக்கு ஏற்பட்ட அனுபவத்தைப் பகிர்ந்துக் கொண்டார். ஒரு முறை தனது மடத்தில் நிலவிய மனிதருக்கு வெறுப்பை ஏற்படுத்தும் வகையில் கடைப்பிடிக்கப்பட்ட சட்டங்களைக் குறித்துத் தன் ஆன்ம இயக்குநரிடம் புகாரளித்தார்.

அந்த ஆன்ம இயக்குநர் இவருக்கு மறுமொழியாக ''எதையாவது வாற்றி செய்'' என்று மட்டும் கூறினார். இதையே வேறு விதமாகக் கூற வேண்டுமானால், ''உனது விசுவாச வாழ்வை குறைந்தபட்ச அளவீடுகளோடு வாழால் புதுப்பிக்கப்பட்ட இதயத்துடன் வாழ ஆரம்பி'' என்பதாகும். இயேசுவின் செய்தியும் இதுவே. "நான் எத்தனை தூரம் என் வாழ்வில் பாவம் செய்யாமல் வாழ்வது என்றுக் கேட்டு வாழ்வதைவிட என் அன்பை நான் எத்தனை அளவிற்கு பயணிக்கச் செய்வேன்?'' என்றுக் கேட்டு வாழ அழைக்கிறார்.

4. நற்செய்தி நமது நேர்மையை சரியான முறையில் பரிசோதித்தறியும் ஒரு சீரானக் கட்டமைப்பு:

என் நண்பர் வசித்துவரும் வீட்டின் ஒரு பகுதி 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. சமீபத்மில் அந்த வீடு முழுவதும் தீவிரமானப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது. அதன் தரைகள் உடைத்துப் பார்க்கப்பட்டன. அந்த வீட்டிலிருந்த ஒவ்வொரு பிளவும், வெடிப்பும் துல்லியாக

அளக்கப்பட்டன. அது மிகவும் சோர்வைத் தரக்கூடியப் பணியாக இருந்தாலும், அது அந்த கட்டடத்திற்குத் தேவையானது. அது எத்தனை அளவுக்கு நிலைத்திருக்கும் என்பதைக் கண்டறிய அந்த பரிசோதனை மிகவும் அவசியம்.

நமது சீடத்துவத்தை சீர்தூக்கிப் பரிசோதிக்கும் ஒரு அளவுகோலாக இன்றைய நற்செய்தி விளங்க கிறது. இயேசு நம்மிடம் ”உங்கள் வாழ்வைப் பிணைத்து வைத்திருப்பது எது? என்றுக் கேட்கிறார்.

நமது அளவீடுகளின் போது நமது வாழ்வின் அமைப்புகள் தள்ளாடும் நிலைக்கு செல்லும் போது நம் வாழ்வின் செயல்பாடுகள் நமக்கு தெரியவரும் அவை --

- விரிசலடைந்த உறவுகள்
- குடும்பத்தில் இருக்கும் நோய்நொடிகள்
- வேலையில்லா திண்டாட்டங்கள்
- தோல்வியடைவோமோ என்ற எண்ணங்கள்
- தன் வாழ்வைத் தெரிந்துக் கொள்வதில் நிச்சயமில்லாத நிலை
- தனக்குள்ளே பெரும்சுமை சுமந்திருப்பது போன்ற உணர்வு.

இத்தகைய நிலையில் நமக்களிக்கப்பட்டுள்ள சட்ட திட்டங்கள் நம்மை நசுக்குவதற்கல்ல மாறாக நத்மைத் தாங்கிப் பிடிப்பதற்காகவே - பழைய வீட்டின் உத்தரங்கள் வீட்டினட மேற்சூரையைத் தாங்கி நிற்பதைப் போல அவை நம்மை சிறைப்பிடிக்க அல்ல மாறாக நம்மைத் தாங்கிப் பிடிக்கவே உதவுகின்றன.

5. இயேசு நம்மை தம் (அன்பால், வல்லமையால்) நம்மை மூழ்கடிக்க விரும்புகிறார். எனவே நாம் அனைவரும் ஒரே விதமாக ஒரே சீரான இடத்தில் தான் நிற்கிறோம் --

தவறுகளை செய்யாதீர்கள் : இயேசுவின் இன்றைய வார்த்தைகள் நம்மைத் திணறடிக்கின்றன. பரிசேயர்களால் கூட அவரது வார்த்தைகளை முழுமையாக கடைப்பிடிக்க இயலவில்லை.
ஆனால் இயேசு கூறியவற்றின் இரகசியம் இங்குத் தான் அடங்கியிருக்கிறது -
இயேசு அனைத்து மாந்தரையும் ஒரே இடத்தில் ஒரே அளவில் வைத்துப் பார்க்க விரும்புகிறார்.
ஒருவரும் தங்களைக் குறித்துத் தம்பட்டம் அடித்துக் கொள்ள முடியாது.
நம்மில் ஒருவரும் ”நான் போதுமான அளவுக்குச் செய்து விட்டடேன்” என்றக் கூறிக் கொள்ள முடியாது.
நம் அனைவருக்குமே இறையருள் தேவை
நம் அனைவருக்கும் அவரது தூய ஆவியார் தேவை

திருச்சட்டமானது நமக்கு திசையைக் காட்டுகிறது.
இறையன்பு நாம் அதன் வழி நடக்க வலிமையைத் தருகிறது.

நாம் ஒருபோதும் ஓரிடத்திலேயே நிற்பவர்களாக இராமல் முன்னேறிச் செல்பவர்களக இருத்தல் வேண்டும்.

நிகழ்வு - மறைந்திருந்து வெளிப்படும் வன்கொடுமை

ஒரு ஆசிரியை தன் வகுப்பு மாணவன் தன் வகுப்பிலிருந்த மற்றொரு மாணவனை எப்போதும் துன்புறுத்துவதைக் குறித்து என்னிடம் பகிர்ந்துக் கொண்டார். அந்த பையனைக் கூப்பிட்டு விசாரித்த போது அவன் அதை வேடிக்கைக்காக செய்ததாகக் கூறினான். ஆயினும் அவனால் துன்புறுத்தப்பட்டக் குழந்தை தினமும் அழுதுக்கொண்டே தன் வீடிற்குச் சென்றது. இதை சொன்ன ஆசிரியை என்னிடம் ”பார்த்தீர்களா வன்முறை என்பது கைமுட்டிகளுக்கு முன்பே காத்து நிற்கிறது என்றார்.

பார்வைகளே நம்மைக் காயப்படுத்தலாம:

சிறு மனவருத்தங்கள், வெறுப்புகள் கவனிக்கப்படாமல் விடப்பட்டால் அது நஞ்சாக மாறிவிடும். எனவே தான் இயேசு பீடத்தின் முன் காணிக்கையை பலிசெலுத்தக் கொண்டுவருவதற்கு முன் யாருடனாவது மனத்தாங்கள் இருப்பதாக நினைவிற்கு வந்தால் பலிசெலுத்த வருமுன் மனத்தாங்கல் இருப்பவுடன் ஒப்புரவாக வேண்டும் என்றுக் கேட்டுக் கொள்கிறார்.

6. இயேசு ஒரு நேர்மையான யூதர். அவர் திருச்சட்டத்தை தம் அன்பினால் நிறைவு செய்தார்:

சிலர் இயேசுவைக் குறித்து அவர் பழைய ஏற்பாட்டின் மேல்பூச்சை மட்டும் எடுத்துக் கொண்டு எவ்வித நிபந்தனையையும் முன் வைக்காத ஒரு மென்மையானக் கடவுளை போதிக்கிறார் என்றக் கூறுவதுண்டு. ஆனால் இயேசுவோ ஒரு நேர்மையான யூத குலத்தவர். மோசேயின் சடட்ங்களை மிகவும் மதிப்பவர். அவர் தன்னை துன்பம் விளைவிக்காததன் சின்னமாக.

அல்லது கடைப்பிடிக்க சிரமமான கோட்பாடுகளைக் களைவதற்காக நியாயப்படுத்தி பேசுவராக மக்கள் தம்மைப் பார்ப்பதை அவர் தடுத்தார். அதை அவர் ஏற்கவில்லை.

அவர் சட்டத்தைக் கூர்மைப்படுத்தியது மக்களை வேவு பாாக்க / கண்காணிக்க அல்ல மாறாக தனி மனிதரின் கடமையைக் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திஅவர்களை விழித்தெழ செய்யவே.

- நான் உறுதிமொழிகளை மட்டும் தந்து விட்டு வாளாவிருக்கப்போவதில்லை மாறாக நான் உண்மை வழி நடப்பேன்.
- எனது சௌகரியத்திற்கு மட்டும் ஒப்புரவை நாடமாட்டேன் - எப்போதும் தேடுவேன்
- எனது நடவடிக்கைகளை மட்டுமல்ல எனது இதயத்தையும் கண்காணிப்பேன்.
- மற்றவர்களுக்கு தீமை செய்யாதிருப்பது மட்டுமின்றி மற்றவர்களை கௌரவமாக நடத்துவேன்.

இவற்றை நான் வாழும் சமுதாயம் என்னைக் கண்காணிப்பதற்காக மட்டும் செய்யப் போவதில்லை - மாறாக என் முழுமனச்சான்றுடன் இயேசு என்னில் நம்பிக்கைக் கொண்டிருக்கிறார் என்பதற்காகவே செய்கிறேன்.

இதுவே விடுதலை
இதுவே மாண்பு

7 சட்ட திட்டங்கள் நமக்கு ஆதரவாக இருப்பதற்கே - அவை தளைகள் அல்ல

இன்றைய முதல் வாசகம் கடவுள் ஒருபோதும் நம்மை சோதிப்பவர் அல்ல என்பதை நினைவூட்டுகிறது.
அவர் எப்போதும் நம்மை வாழ்விற்கே அழைக்கிறார்.
சட்டங்களை வாழும் போது அவை வெறும் எழுத்துகள் மட்டுமல்ல அவை நம்மைக் காப்பவை. உலகிற்கு நாம் உப்பாக, ஒளியாகத் திகழ உதவுகின்றன.

அவைகள் நம்மை சிறைப்பிடிக்கும் கூண்டுகள் அல்ல
அவை நமக்கு ழைிகாட்டும் கருவிகள்.

இவற்றையெல்லாம் அன்பு நிறைவு செய்யும் போது நாம் ஒரு வேறுபட்ட வாழ்வை வாழ ஆரம்பிக்கிறோ்

- நம் அண்டை அயலாருடன் மாறுபட்டவிதமாக பழக ஆரம்பிக்கிறோம்
- நம்மை காயப்படுத்துபவர்களுடன் மாறுபட்ட வாழ்வு வாழ்கிறோம்
- மன்னிப்புத் தேவைப்படுவோருடன் மாறுபட்ட விதமாக அணுகுகிறோம்
- நாம் இப்போது கடவுளை அணுகும் விதமே மாறுபடுகிறது

சுருங்கக் கூறின் அந்த ஆன்மீக இயக்குநர் கூறியதுப் போன்று ''மாற்றிச் செய்துப் பாருங்கள்'' என்பதை ஒத்ததாக உள்ளது.

நிறைவாக ஒரு கதை -- பழுது பார்க்கப்பட்ட சுவர்
ஒரு கட்டடத் தொழிலாளி ஒரு வீட்டில் பணியாற்றிக் கொண்டிருந்தார். அந்த வீட்டு சுவற்றில் ஒரு பெரிய விரிசல் இருந்தது. அந்த வீட்டு சொந்தக்காரர் அவரிடம் ''ஐயா அந்த விரிசல் தெரியாமல் வண்ணம் தீட்டிவிடுங்கள் '' என்றார். ஆனால் அந்தக் கட்டடத் தொழிலாளி ''நான் அந்த விிசழல சரி செய்யாமல் வண்ணம் தீட்டினால் அந்த விரிசல் அப்படியேத் தான் இருக்கும். மேலும் விரிசல் பெரிதாகும். நான் இப்பகுதி சுவற்றை இடித்து அடித்தளத்திலிருந்து சரி செய்து கட்டடத்திற்கு வலுவூட்ட வேண்டும். பின்னரே கட்டடம் சரியாகும்'' என்றார்.

சகோதர சகோதரிகளே இயேசு நமது விரிசலான வாழ்வு சுவற்றை வண்ணம் தீட்டி மூடிவிட விரும்பவில்லை
அவர் நம்மை அபரிமிதமாக அன்பு செய்கிறார்.
அவர் பலகீனப்பட்டதை திறந்துப் பார்க்கிறார். நொறுங்கிப் போனதை குணமாக்குகிறார். பலகீனமாக உள்ளவற்றிற்கு வலுவூட்டுகிறார். தன்னிலே தனித்து நின்று நிற்க முடியாதவற்றை மீண்டும் சரிசெய்து நிலைநிறுத்துகிறார்.

இயேசுவின் கட்டளைகள் சட் திட்டங்கள் விரிசலை மூடும் வண்ணங்கள் அல்ல - மாறாக அவை நாம் நிலைத்து நிற்பதற்கான அடித்தளங்கள்.
அவரது அன்பே நமக்கு வலிமை -- அவரது தூய ஆவியே நம்மைக் கட்டியெழுப்புபவர்

அவர் நாம் நம்மிடமுள்ள விரிசலை சரி செய்ய அவரை நாம் அனுமதிப்போமா?
அதனாவ் நமது வாழ்வு உறுதியாக நிலைத்து நின்று அவரது ஒளியால் பிரகாசிக்கும் -- ஆமென்